தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-11-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலைக்கழகத்திற்கு மத்திய மருந்து மற்றும் மணமூட்டும் பயிர்கள் நிறுவனத்தின் இயக்குநர் வருகை**

மத்திய மருந்து மற்றும் மணமூட்டும் பயிர்கள் ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் முனைவர். திரிபாதி அவர்கள் 22-11-2015 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களை சந்தித்து, மருந்து மற்றும் மணமூட்டும் பயிர்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆராய்ச்சிகள் மற்றும் இரு நிறுவனங்களுக்கிடையேயான கூட்டு ஆராய்ச்சி திட்டங்கள் பற்றி கலந்துரையாடினார்.

லக்னோ மற்றும் பெங்களூரில் உள்ள மத்திய மருந்து மற்றும் மணமூட்டும் பயிர்கள் ஆராய்ச்சி மையத்தின் மேம்படுத்தப்பட்ட ஆய்வகங்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முதுநிலை ஆராய்ச்சி மாணவர்கள் ஆய்வு மேற்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்தார்.

முனைவர். க. ராஜாமணி, பேராசிரியர் மற்றும் தலைவர் அவர்கள், மருந்து மற்றும் மணமூட்டும் பயிர்கள் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சிகளையும், ஆராய்ச்சி திட்டங்களையும் விளக்கினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்